DINAMALAR

9 APR 2022

PAGE 1

# புதுச்சேரி பல்கலைக்கழகத்திற்கு மாவட்ட பசுமை சாம்பியன் விருது



புதுச்சேரி பல்கலைக்கழகத்திற்கு மத்திய அரசின் மகாத்மா காந்தி தேசிய ஊரக கல்வி மன்றம் வழங்கிய மாவட்ட பசுமை சாம்பியன் விருதினை, உதவி பதிவாளர் மகேஷ், முனைவர் நந்திவர்மன் ஆகியோர் துணை வேந்தர் குர்மீத் சிங்கிடம் ஒப்படைத்தனர்.

**புதுச்சேரி, ஏப். 9–**

புதுச்சேரி பல்கலைக்கழகத்திற்கு மாவட்ட பசுமை சாம்பியன் விருதினை மத்திய அரசு வழங்கியுள்ளது.

புதுச்சேரி பல்கலைக் கழகத்தில் கடந்த 4 ஆண்டுகளாக பசுமை வளாக திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இதன்படி பல்கலைக் கழக வளாகத்தில் துாய்மை செயல் திட்டம், பருவ நிலை மாற்றம், நிலையான பசுமை வளர்ச்சி உள்ளிட்ட வளர்ச்சி பணிகளில் அதிக கவனம் செலுத்தி வருகிறது.

அத்துடன் பல்கலைக் கழக மானிய குழுவின் கட்டாய தேவைகள், கல்வி அமைச்சகம், சுற்றுச்சூழல் அமைச்சகம், வனம் மற்றும் காலநிலை மாற்றம் அமைச்சகம், புதுப்பிக்கதக்க எரிசக்தி அமைச்சகங்களில் அத்தியாவசிய திட்டங்களும் பல்கலைக்கழக வளாகத்தில் செயல்படுத்தப்படுகின்றன.

இந்நிலையில், மத்திய அரசின் உயர் கல்வி துறை, மகாத்மா காந்தி தேசிய ஊரக கல்வி மன்றம், கடந்த 2021–22ம் ஆண்டிற்கான மாவட்ட பசுமை சாம்பியன் விருதினை புதுச்சேரி பல்கலைக்கழகத்திற்கு வழங்கி பாராட்டியுள்ளது.

இவ்விருதினை மாவட்ட கலெக்டர் வல்லவன், பல்கலைக்கழக பிரதிநிதிகளான உதவி பதிவாளர் மகேஷ், பசுமை வளாக ஒருங்கிணைப்பாளர் நந்திவர்மன் ஆகியோரிடம் வழங்கினார்.

பல்கலைக்கழகவளாகத்தில் பசுமை மேலாண்மை, ஆற்றல் மேலாண்மை, கழிவு நீர் மேலாண்மை, நீர் மேலாண்மை ஆகியவற்றின் மூலம் துாய்மை செயல் திட்டத்தை செயல்படுத்தி வெற்றி கண்டதற்காக இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

இவ்விருது பல்கலைக் கழக துணைவேந்தர் குர்மீத் சிங்கிடம் ஒப்படைக்கப்பட்டது.